1968 ஆகஸ்ட் 16]

உர விநியோகம்

* 9 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எந்தெந்த மாவட்டங்களில் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உரம் விநியோகம் செய்யப்படுகிறது ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் தனி நபர்களாலும் கூட்டுறவு சங்கங்களாலும் விநியோகம் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இம் மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உரம் வழங்கப்படுகிறது.

(இ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு மாவட்டங்களில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக மட்டுமன்றி, தனிப்பட்ட வணிகர்கள் மூலமாகவும் உரம் வழங்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக இன்றைக்கு நல்ல முறையில் மக்களுக்கு இது போன்ற பொருள்களையெல்லாம் விநியோகம் செய்ய முடியும் என்பதிலே நம்பிக்கை வைத்திருக்கக் கூடிய சர்க்கார், தனியார் துறை மூலமாக உரத்தை விநியோகம் செய்து வருவதை நிறுத்தி எல்லாவற்றையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே விநியோகம் செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும், அதன் மூலமாக உரத்தை வழங்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உரம் தேவையோ அவ்வளவையும் எடுத்துக் கொள்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களிலே போதிய பண வசதி இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உரம் வழங்க வேண்டுமென்ற காரணத்தால் தனிப்பட்ட வணிகர்கள் மூலம் வழங்கும் திட்டத்தையும் அமல் படுத்தி வருகிறோம். சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்கவில்லை என்றுகூட உறுப்பினர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் தகவல்கள் வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களைப் பற்றியெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்து தனியார் துறை மூலமாகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன் மூலமாகவோ உரத்தை வழங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, the Government have now got experience with regard to the distribution of fertilisers both through co-operatives and private agencies. Besides that, we are in the fortunate position of having surplus fertilisers. In spite of that, whenever we go to villages—in fact I went the other day to Singaperumalkoil in the Chingleput district—we hear the chronic

complaint that the fertilisers do not reach the small farmers and that they do not get even half a bag or two or three measures of fertilisers. So, will the Government find out what exactly is the difficulty in the distribution system and see that all the loopholes in the distribution system are plugged so that there would not be any bad name for the distribution system itself?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பதுதான் எனக்குப் புதுமையாக இருக்கிறது. உரம் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற கஷ்டம் தமிழகத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இல்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் அதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மாவட்ட கலெக்டர் நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார். தற்போது உரத் தட்டுப்பாடு என்ற நிலை கிடையாது.

திரு. முனு. ஆதி: செங்கற்பட்டு மாவட்டத்தில் உர விநியோகம் பஞ்சாயத்து யூனியன் மூலம் நடைபெறுவதில் எந்தவிதமான புகாரும் இல்லாமல் நல்லபடியாக உரம் கிடைக்கும் நிலை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறுவது ஒருவேளை நமக்கு 5,000 மூட்டைகள் ஒதுக்குகிறார்கள் என்றால் அதைப் பகிர்ந்து கொடுக்கும்போது அது போதாது என்ற கருத்தில் இருக்கலாம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கொடுக்கப்படும் போது நல்ல முறையில் கொடுக்கப்படுவதால் மற்ற மாவட்டங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விநியோகிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இதைப் பற்றி முன் கேள்விக்கே பதில் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடைபெறுகிற விநியோக முறை எங்கு சரியில்லையோ அங்கெல்லாம் அதைப் பற்றி மாவட்ட கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தப் பகுதியில் மட்டும் உர விநியோகப் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனுக்கு அளிக்க அரசு அனுமதியளிக்கும்.

Farm Jails

* 10 *Q.*—THIRU T. MARTIN: THIRU V. SWAMINATHAN: THIRU P. MALAICHAMY: THIRU K. VINAYAKAM: THIRU N. S. V. CHITHAN: } Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to establish farm jails in this State: and

(*b*) if so, the details thereof?